2021 செப்டம்பர் 13] [திரு. கா. ராமசந்திரன்]

யானைகள் ஊருக்குள் வராமல் நம்மால் தடுக்க முடியும் என்று ஆலோசித்து வருகிறோம். எனவே, இந்த அரசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று நிச்சயமாக இந்தப் பணியை மேற்கொள்ளும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி யானை தாக்குதலின்மூலம் உயிரிழந்தவர்களுக்கு சென்ற ஆட்சியில் 4 இலட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தற்போது அத்தொகையுடன் ரூ.1 இலட்சத்தைச் சேர்த்து ரூ.5 இலட்சமாகக் கொடுக்கப்போகிறோம். நேற்றைக்கு உயிரிழந்தவருடைய இருப்பிடத்திற்கே சென்று ரூ.50,000/– advance *கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆதார் அட்டை உள்ளிட்ட ஆவணங்களை* verify *செய்துவிட்டு, அவை சரியாக இருந்தால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு* balance *தொகை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. கிருஷ்ணசாமி, கையை ஏன் தூக்குகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) காட்டுப் பன்றி தொடர்பாக பதில் சொல்லவில்லையா? சொல்லிவிடுங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சேர்க்கப்பட்ட விலக்கு அளிக்கப்பட்டுள்ள மாவட்டங்களுடன் இந்த இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து, காட்டுப் பன்றிகளை* vermin *என்ற வகையின்கீழ் கொண்டுவந்து, அவற்றை கட்டுப்படுத்துவதற்கு உரிய ஆணைகள் அரசால் அறிவிக்கப்படும்.*

(உ) பூந்தமல்லி தொகுதி, செவ்வாப்பேட்டை கிராமம், மூன்று சிறுவர்கள் கிருஷ்ணா கால்வாயில் விழுந்து உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள். ஒரு வரியில் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லி தொகுதி, செவ்வாப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த 10, 12 வயதுள்ள மூன்று பிள்ளைகளை, பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டு, அந்தச் சிலையை ஆற்றில் கரைப்பதற்காக அனுப்பியிருக்கிறார்கள். பிள்ளையார் சிலையை கிருஷ்ணா*

கால்வாயில் கரைக்க முற்பட்டபோது, அந்த மூன்று பிள்ளைகளும் வழுக்கி விழுந்து இறந்துவிட்டார்கள். அவர்கள் குடும்பத்தினருக்கு அரசு நிவாரணம் வழங்கிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) மேட்டூர், நீட் தேர்வு அச்சத்தால் மாணவன் தனுஷ் உயிரிழந்தது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. கிருஷ்ணசாமி, உங்களுடைய கோரிக்கையைப் பதிவு செய்துவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், உங்களுடைய கேள்வியை ஒரு வரியில் சொல்லுங்கள். உங்களுடைய தலைவர் சொன்ன அதே விஷயத்தைத்தானே சொல்லப்போகிறீர்கள். நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியில் நடந்த சம்பவம், அவர் எனக்கு உறவினர்; எனக்குப் பக்கத்துவீடு. எங்களுடைய தலைவர் அவர்கள் பேசும்போது, தெளிவாகச் சொன்னார்கள். நேற்று ஐந்து மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அனைவரும் வந்திருந்தார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வந்திருந்தார்கள். NEET தேர்வினால் பாதிக்கப்பட்ட மாணவன் குடும்பத்திற்கு ரூ.10 இலட்சம் நிதி கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குடும்பத்திற்கு ரூ.1 கோடி நிவாரணம் வழங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) பதிவு செய்துவிட்டேன், போதும். (குறுக்கீடு) நன்றியும் சொல்லிவிட்டீர்கள். ரூ.1 கோடி நிவாரணத் தொகை வேண்டுமென்று பதிவும் செய்துவிட்டீர்கள். மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

(அ) வாணியம்பாடி, ஜீவா நகர், திரு. வசீம் அக்ரம் படுகொலை மற்றும் நீட் தேர்வு இரத்து—*தொடர்ச்சி*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் வசீம் அக்ரம் என்பவர் படுகொலை செய்யப்பட்டது குறித்து, நானும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு அளித்திருந்தேன்.*